# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 1257/2016

ஆணை எண். 0016/2017

நாள் : 06/02/2017

09.12.2016 நாளிட்ட "தினமலர்" நாளிதழ் செய்தி — தாமாக முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 14,
சென்னை மாநகராட்சி. — எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், 188–வது வார்டு, பகுதியிலுள்ள பொதுப்பயன்பாட்டு இடம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதை குறித்து "பூங்கா இடத்தில் மாட்டுத் தொழுவம்" என்ற தலைப்பில் 09.12.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியினை முறையீடாகக் கருதி 1257/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இச்செய்தி குறித்து மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், 188–வது வார்டு, ராம்நகர் தெற்கு, பால அம்புகன் நகர் உள்ளிட்ட பகுதியில், பொதுமக்கள் பயன்பாட்டுக்கென ஒதுக்கி, மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், மீண்டும் ஆக்கிரமிக்கும் முயற்சியில், அந்த இடத்தில் மாடுகளை கட்டிவைத்துள்ளனர் என்ற செய்தியைக் கண்டறிந்து "பூங்கா இடத்தில் மாட்டுத் தொழுவம்" என்று தலைப்பிட்டு தினமலர் நாளிதழ் 09.12.2016 அன்று ஒரு செய்தியினை வெளியிட்டது. இச்செய்தி குறித்து மண்டல அலுவலர், மண்டலம் –14 அவர்களின் அறிக்கை, இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 1257/2016, நாள் 02.01.2017 மூலம் கோரப்பட்டு, மேற்படி அறிக்கை மேற்படி மண்டல அலுவலர் கடித எண். ம.அ.14. ந.க. எண். 135/A5/2017, நாள் 19.01.2017 மூலம் பெறப்பட்டது.

2. மேற்படி அறிக்கையில், சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம் , கோட்டம் 188–க்கு உட்பட்ட ராம்நகர் தெற்கு மற்றும் ஸ்ரீநகர் இரண்டையும் இணைக்கும் பகுதியில் இருந்த 920.18 சதுர அடி காலிமனையில் 05.09.2016 அன்று மாநகராட்சியின் அனுமதியின்றி புதியதாக பிள்ளையார் சிலையை வைத்து வழிபட அப்பகுதிப் பொதுமக்கள் சிலர் முயன்றனர் என்றும் அவர்களது வழிபாட்டு முயற்சியைத் தடுத்து அவ்விடத்தில் இருந்த பிள்ளையார் சிலை 11.11.2016 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியால், ஆய்வாளர், பள்ளிக்கரணை காவல் நிலையம் அவர்களின் பாதுகாப்புடன் அகற்றப்பட்டது என பெருங்குடி மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், அவ்விடத்தில் "திறந்தவெளி நிலம்" என சென்னை மாநகராட்சியால் போர்டு வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இந்நிலையில், "பூங்கா இடத்தில் மாட்டுத்தொழுவம்" என்று தினமலர் நாளிதழ் 09.12.2016 அன்று செய்தி வெளியிட்டதை தொடர்ந்து, கோட்டம் – 188, சுகாதார ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு அம்மனையில் கட்டப்பட்டிருந்த மாடுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட இடம் பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடம் என்பதற்கான ஆவண ஆதாரங்கள் இல்லை என்றும், அந்நிலம் உள்ளாட்சி அமைப்புக்கு திறந்தவெளி நிலமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலம் இல்லை என்றும் ஆனால், அந்த இடத்தினை உரிமைக் கோரி யாரும் எவ்வித ஆவண ஆதாரங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனினும், நில உரிமை மற்றும் நில உபயோகத் தன்மை குறித்த விவரங்களை சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் கோரியுள்ளதாகவும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே, இந்நிலையில் நில உரிமை குறித்த விவரங்களை வட்டாட்சியரிடமிருந்து பெற்றபின், அந்நிலத்தை எந்த ஆக்கிரமிப்புக்கும் உள்ளாக்காமல், பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள மண்டல அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், இடைப்பட்ட காலத்தில் மீண்டும் அந்நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகாமல் இருக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் பெருங்குடி மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

13/2/2017

செயலாளர்.

10.2.17

10/2/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –14,
சென்னை மாநகராட்சி,
எண்.6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம், சென்னை – 91.